**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 06.01.2020—ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **06.01.2020** இராசிபுரம் நகராட்சி

**பொருள்கள்**

(1) இராசிபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றது. இதனால் கீழ்க்கண்ட சாலைகள் மிகவும் சேதமடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. ஆகவே இந்த சேதமடைந்த சாலைகளை புதுப்பிக்க மதீப்பீடு ரூ.141.18/— இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டப்பபணிக்கான செலவினத்தை 2019—2020—ஆம் ஆண்டுக்கான 14—ஆவது நிதிக்குழு மானிய நிதியில் இருந்து மேற்கொள்ளுவதற்கு நிர்வாக அனுமதி கோரி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **சாலையின் பெயர்** | **சாலையின் நீளம் (மீ)** | **சாலையின் சராசரி அகலம் (மீ)** | **மதிப்பீட்டுத் தொகை (இலட்டத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | சுவாமி சிவானந்தா சாலை (அங்கம்மாள் மனைப்பிரிவு) தார்தளம் மற்றும் சுண்ணாம்புகார தெருவில் பேவர் பிளாக் அமைத்து மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல். | 413 | 7.00 | 40.00 |
| 2 | வி. நகர் சாலை எண். 5—இல் தார்தளம் அமைத்து மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல். | 304 | 7.00 | 40.00 |
| 3 | வி. நகர் சாலை எண் 19 தார்தளம் அமைத்து மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல். | 200 | 7.00 | 26.00 |
| 4 | கோனேரிப்பட்டி ஏரி வடக்கு பிளாக் (இராம் நகர்) தார்தளம் அமைத்து மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல். | 276 | 7.00 | 35.18 |
| | **மொத்தம் :** | **1193** | | **141.18** |

**அலுவலகக் குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட சாலைப் பணிகளை 14—வது நிதிக்குழு மானிய நிதியிலிருந்து செலவினம் செய்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

. (497/19/இ1)

**தீர்மானம் எண். 712**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான வி. நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்திலுள்ள திறந்தவெளிக் கிணற்றிலிருந்து தாச தெருவிலுள்ள நகர் நல மையம் மற்றும் காதர் தெரு பொதுக் கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்யப்பட்டு வந்தது. தற்போது TURIF சாலை அமைத்து மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் தாச தெரு வழியாக வரும் உப்பு நீர் குழாய் வடிகாலின் சென்டரில் உள்ளதால் சாலைப் பணிகள் மேற்கொள்ள இடையூறாக உள்ளதால் புதியதாக HDPB பைப் மற்றும் GD பைப் அமைத்து மேற்காணும் நகர்நல மையம் மற்றும் காதர் தெரு பொதுக் கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 130000/–ற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(09/20/இ2)

**தீர்மானம் எண். 713**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் டிப்பர் லாரி வாகன எண். TN 28 AS 0110–இன் தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 24.12.2019 அன்று இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | JUK ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம். |
|---|---|---|---|
| 1) | செல்ப் மோட்டார் சர்வீஸ் | ரூ. 6500/– | ரூ. 9600/– |
| 2) | டைனமோ மோட்டார் சர்வீஸ் | 4500/– | 5800/– |
| 3) | 4 வீல் கிரீஸ் மாற்றுதல் | 19500/– | 21300/– |
| 4) | இன்ஜின் ஆயில் சர்வீஸ் கியர் ஆயில் சர்வீஸ் கிளட்ச் ஆயில் சர்வீஸ் | 32500/– | 34200/– |
| 5) | ஹைட்ராலிக் ஆயில் சர்வீஸ் | 10500/– | 11900/– |
| 6) | எலக்ட்ரிக்கல் மணி புதிய ஹாரன் மாற்றுதல் | 7465/– | 8350/– |
| 7) | வர்ணம் பூசுதல் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டுதல் | 18000/– | 19200/– |
| | **மொத்தம் :-** | **98965/–** | **110350/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் M/s. லட்சுமி ஆட்டோ சர்வீஸ் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காண் பணிகளை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2982/19/எச்1)

**தீர்மானம் எண். 714**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிலுள்ள இரு பேட்டரி வாகனங்களில் மின்மோட்டார் மற்றும் 5 பேட்டரிகள் இல்லாத காரணத்தினால் இயங்கவில்லை. எனவே, புதிய ஒரு மின் மோட்டார் மற்றும் 5 பேட்டரிகளை M/s. பிரியம் இண்டஸ்ட்ரீஸ், தாராபுரம் என்ற தயாரிப்பு நிறுவனத்தில் வாங்கிக் கொள்ள ஆகும் செலவினம் ரூ. 66666/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(2767/19/எச்1)**

**தீர்மானம் எண். 715**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்படும் கீழ்காணும் சமுதாய கழிப்பிடங்களை சுபம் கங்கா சேவா சன்ஸ்தான் என்ற நிறுவனத்தின் மூலம் பராமரிக்க ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **வார்டு எண்.** | **சமுதாய கழிப்பிடங்கள்** |
|---|---|---|
| 1 | 9 | வி. நகர் ரோடு எண். 3 (தீயணைப்பு துறை அருகில்) |
| 2 | 14 | காதர் தெரு |
| 3 | 20 | கோனேரிப்பட்டி ஏரி கடைக்கால் ரோடு |
| 4 | 22 | கோனேரிப்பட்டி காட்டுக் கொட்டாய் |
| 5 | 23 | காளி சந்து |

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் 5 கழிப்பிடங்களை சுபம் கங்கா சேவா சன்ஸ்தான் என்ற நிறுவனத்தின் மூலம் கழிப்பிடம் ஒன்றிற்கு மாதாந்திரக் கட்டணம் ரூ. 6000/— அடிப்படையில் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்காண் பணிகளை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(535/18/எச்1)**

**தீர்மானம் எண். 716**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சியில் ஒரு கணினி வசூல் மையம் மட்டுமே உள்ளதால், தீவிர வரி வசூல் பணி மேற்கொள்ள கூடுதலாக ஒரு வரி வசூல் மையம் (Collection Counter) ஏற்படுத்தவும், அலுவலக கட்டட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட ரூ. 130000/— மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 130000/— மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(45/20/இ1)

**தீர்மானம் எண். 717**

அனுமதிக்கப்பட்டது.

(7) இந்நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியில் கீழ்கண்டுள்ள விவரப்படிக்கான பணிகள் மேற்கொள்ள 03.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் பெயர் (குடிநீர் வடிகால் நிதி) | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விலாசம் | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | வார்டு எண். 8 வ.உ.சி. நகர் மேல்நிலைத் தொட்டிக்கு chlorination மோட்டார் வாங்குதல் | ரூ. 2.15 இலட்சம் | 1) ஸ்ரீ ராஜகணபதி கெமிக்கல்ஸ், சேலம் | – | 2.81 % |
| | | | 2) ஸ்ரீ பாலாஜி கம்பெனி, சேலம் | 0.19 % | - |

பெறப்பட்ட பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக 0.19% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி கம்பெனி, சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2408/19/இ2)

**தீர்மானம் எண். 718**

அனுமதிக்கப்பட்டது.

(8) இந்நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியில் கீழ்கண்டுள்ள விவரப்படிக்கான பணிகள் மேற்கொள்ள 03.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் பெயர் (குடிநீர் வடிகால் நிதி) | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விலாசம் | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | இராசிபுரம் நகராட்சி பழைய பேருந்து நிலைய OHT–இல் சோடியம் ஹைபோ குளோரைடு மோட்டார் பழுதுகள் சரி செய்தல். | ரூ. 1.20 இலட்சம் | 1) ஸ்ரீ ராஜகணபதி கெமிக்கல்ஸ், சேலம் | – | 2.91 % |
| | | | 2) ஸ்ரீ பாலாஜி கம்பெனி, சேலம் | 0.46 % | - |

பெறப்பட்ட பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக 0.46% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி கம்பெனி, சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2409/19/இ2)

**தீர்மானம் எண். 719**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலைய அங்கீகாரம் புதுப்பிக்க வட்டாரப் போக்குவரத்து அலுவலரால், மாற்றுத் திறனாளிகள் பேருந்து ஏற சக்கர நாற்காலி வசதி மற்றும் ஒய்வறை அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. பேருந்து நிலைய அங்கீகாரம் புதுப்பிக்க அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 15–இன்கீழ் பணியினை உடனடியாக மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 150000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) பேருந்து நிலைய அங்கீகாரம் புதுப்பிக்க அவசர அவசியம் கருதி மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அங்கீகாரம் வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி சட்டப் பிரிவு 15–இன்கீழ் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(617/18/இ1)

**தீர்மானம் எண். 720**

அனுமதிக்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சி தட்டான்குட்டை உரக்கிடங்கில் BIO Mining முறையில் குப்பைகளை அகற்றும் பணியில் 83 குதிரைத்திறன் மின்திறன் பெறும் பொருட்டு அளவுமாணி, பேனல் பலகைகள் மற்றும் பிரதான சுவிட்சுகள் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு ரூ. 107000/–ற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பணியின் அவசர அத்தியாவசியத்தினைக் கருதி மின் இணைப்பு பெறும் பணிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

(இ1/1899/18)

**தீர்மானம் எண். 721**

அனுமதிக்கப்பட்டது.

(11) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலுள்ள வாக்காளர்களின் ஆதார் எண், தொலைபேசி எண் இணைப்பு மற்றும் 18 வயது நிரம்பிய இளம் வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல், திருத்தம், இடம் மாற்றம் ஆகிய பணிகளை ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 200000/– (ரூபாய் இரண்டு இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(342/19/சி2)

**தீர்மானம் எண். 722**

அனுமதிக்கப்பட்டது.

(12) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலுள்ள வாக்காளர்களின் ஆதார் எண், தொலைபேசி எண் இணைப்பு மற்றும் 18 வயது நிரம்பிய இளம் வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல்,

திருத்தங்கள், இடம் மாற்றம் ஆகிய பணிகளை ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய 27.12.2019 அன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விவரம் | நிறுவனத்தின் பெயர் மற்றும் தொகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | **Sasi Net Zone, 8C, Vaithiyalingam Street, Rasipuram.** | **ISS Computers, 14, Balasubramaniam Complex, Rasipuram.** | **Rasi Computers, 7, DRM Lodge Building, Rasipuram.** |
| 1 | கணினியில் வாக்காளர் பெயர் பதிவேற்றம் செய்தல் | ரூ. 2.00 | ரூ. 2.20 | ரூ. 2.50 |
| 2 | கணினியில் வாக்காளர் பெயர் கல ஆய்வு செய்தல் | ரூ. 1.00 | ரூ. 1.20 | ரூ. 1.50 |
| 3 | கணினியில் படிவம் 6, படிவம் 7, படிவம் 8, 8A பதிவு செய்தல் | ரூ. 2.00 | ரூ. 2.20 | ரூ. 2.50 |

பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sasi Net Zone என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(342/19/சி2)

**தீர்மானம் எண். 723**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– பெ. நடேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.